அத்தனை ஆசிரியர்களையும் அடுத்த ஆண்டிலேயாவது செகண்டரி கிரேடாகப் பதவி உயர்த்த இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கணக்குப்படி அப்படிப்பட்டவர்கள் 8,000 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களில் 5,000 பேர்கள் இந்த ஆண்டில் பதவி உயர்வு மாற்றம் பெறுகிறார்கள். மீதமுள்ள 3,000 பேர்களின் பதவி உயர்வு அடுத்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, பள்ளிகளிலுள்ள ஹையர் கிரேட் ஆசிரியர் பதவிகளில் ஹையர் கிரேட் சம்பளத்துக்குக்கூட செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் நியமிக்கப் படக்கூடாது என்ற அரசு ஆணை இருக்கிறதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். தற்காலிகமாக ஏற்படக்கூடிய அந்தக் காலியிடங்களுக்கு ஹையர் கிரேட் ஆசிரியர்கள் கிடைக்காத காரணத்தால், செகண்டரி கிரேட் ஆசிரியர்களை நியமிக்க அரசு உத்தரவிடுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஹையர் கிரேட் ஆசிரியர்கள் பதவிகள் காலியாக இருந்தால், அந்தப் பதவிகளில் ஹையர் கிரேட் ஆசிரியர்களைத் தான் போட வேண்டும். ஹையர் கிரேட் ஆசிரியர்கள் கிடைக்காத நிலையில் செகண்டரி கிரேட் ஆசிரியர்களைப் போடலாம் என்று தான் இப்போது ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

Laboratory Equipments.

* 36 *Q*.—THIRU S. C. SENGOTTUVELAPPA GOUNDER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government are sanctioning financial assistance to colleges for the purchase of laboratory equipments:

(*b*) if so, the basis on which it is granted and the amount so granted; and

(*c*) the number of (i) Government Colleges (ii) Private College which received financial assistance during 1971-72 ?

1972 ஆகஸ்ட் 18]

விஞ்ஞான பரிசோதனைக் கருவிகள்.

திரு. எஸ். சி. செங்கோட்டுவேலப்ப கவுண்டர்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்லூரிகளுக்கு விஞ்ஞான பரிசோதனைக் கருவிகள் வாங்க அரசு நிதி உதவி வழங்கி வருகிறதா?

(இ) ஆம் எனில், எவ்வித அடிப்படையில் எவ்வளவு தொகை வழங்கப்படுகிறது?

(உ) 1971-72 ஆம் ஆண்டில் நிதி உதவி பெற்ற (1) அரசு (2) தனியார் கல்லூரிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) ஒவ்வொரு ஆண்டும் தனியார் கல்லூரிகள் விஞ்ஞானக் கருவிகள் வாங்க மானியம் வழங்கலாமா என்பது குறித்து முடிவு எடுக்கப் படுகிறது. ஒத்துக்கொள்ளப்பட்ட விலையில் அல்லது கல்லூரி நிர்வாகத்தினரால் செலவழிக்கப்பட்ட தொகையில் 50 விழுக் காடுக்கும், பத்தாயிரம் ரூபாய்க்கும் மேற்படாத வகையில் மானியம் அளிக்கப்பட்டு வருகிறது.

(உ) 1971-72-ம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் தனியார் கல்லூரிகளுக்கு நிதி எதுவும் ஒதுக்கப்படவில்லை.

Commissioner of Rajapalayam Municipality.

* 37 Q.—THIRU S. S. THENNARASU: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any complaint has been received by the Government stating that the Commissioner of Rajapalayam Municipality stopped the supply of electricity and water on the night of 12th February 1972;

(*b*) whether any enquiry was held in this regard; and

(*c*) if so, the details thereof?